LIBRARY
24 AUG 1966
STATE LEGISLATURE, MADRAS

THE

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, 11th March 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (The Hon. Sri S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

காளையார் கோவில் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகள்

* குறுகிய கால கேள்வி எண் 3.—திரு. செ. மாதவன் : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் காளையார்கோவில் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் சம்பளம் கொடுக்கப்படாமல் இருந்ததா ?

(இ) ஆம் என்றால், காரணம் என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : காளையார்கோவில் பஞ்சாயத்து யூனியனில் பணியாற்றி வரும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாக முறையீடுகள் பெறப்பட்டன. இப் பஞ்சாயத்து யூனியன் நிதி நிலையைக் குறித்துப் புலனாய்வு செய்யப்படவிருக்கிறது. அதுவரையில் அரசாங்கம் பிப்ரவரி மாத இறுதிவாக்கில் ரூ. 50,000 (ஐம்பதாயிரம்) வழிவகை முன் பணம் • (Ways and Means Advance) ஒன்றை இப் பஞ்சாயத்து யூனியனுக்கு அனுமதித்தது. இப் பணத்தைக் கொண்டு, யூனியன் பள்ளி ஆசிரியர்களுக்கு டிசம்பர், ஜனவரி மாதச் சம்பளங்களையும், மாநில உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு டிசம்பர் மாதச் சம்பளத்தையும் இந்தப் பஞ்சாயத்து யூனியன் இப்போது வழங்கி இருக்கிறது. யூனியன் பள்ளி ஆசிரியர்கட்கு பிப்ரவரி மாதச் சம்பளம், மானிய உதவி பெறும் பள்ளி ஆசிரியர்கட்கு ஜனவரி பிப்ரவரி மாதச் சம்பளங்களும் இன்னும் செலுத்தப்பட வேண்டும். இவை உறுதியாக விரைவில் செலுத்தப்படுவதற்காக அரசாங்கம் இரண்டாவது வழிவகை முன்பணமாக ரூ. 50,000 வழங்க அனுமதியளித்துள்ளது. எனவே, சம்பள நிலுவைகள் இன்னும் ஒரு வார காலத்திற்குள் செலுத்தப்பட்டுவிடும்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தப் பஞ்சாயத்து யூனியன் நிதியிலுள்ள கோளாறுதான் இதற்குக் காரணமா ? குறிப்பிட்ட பஞ்சாயத்திலே நிர்வாகத்தில் ஏற்பட்ட ஊழல் காரணமா என்று அறிய விரும்புகிறேன்.

[11th March 1966

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : நிர்வாகத்தில் ஏற்பட்ட ஊழல் காரணமாக இருக்க முடியாது. அங்குள்ள பொருளாதாரம் வரவு செலவு சம்பந்தப்பட்ட வரையில் எல்லாவற்றையும் பரிசீலனை செய்தால் தான் நல்லமுறையில் பதில் அளிக்கமுடியும்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, சம்பளம் கொடுக்கப் படவில்லை என்பது உடனடியாக கலெக்டரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ? அதைக் கலெக்டர் பரிசீலித்தாரா ? பரிசீலித்த பிறகு அரசாங்கம் 50,000 ரூபாய் கொடுத்ததா ? அல்லது, அரசாங்கமே முன்கூட்டிக் கொடுத்ததா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : டிசம்பர் மாதத்தில் கொடுக்கவில்லை. இதை பிளாக் டெவலப்மெண்ட் ஆபீசர் கலெக்டருடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். கலெக்டர் சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவந்து ஒரு சில வாரங்களுக்குள் இந்தப் பணம் கொடுக்கப்பட்டது.

திரு. இராம. அரங்கண்ணல் : ரூ. 50,000 முன் பணம் கொடுக்கப்பட்டதற்கு முன்பு பஞ்சாயத்து யூனியனிலிருந்து விவரமான தகவல் கோரப்பட்டதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : தனியாக அந்த பிரச்னை வரும் போதுதான் தகவல் கோர முடியும்.

திரு. ஜே. மாதா கவுடர் : ஆசிரியர்களுடைய சம்பளத்தை பொறுத்தவரை மார்ச் கடைசி வரை கொடுக்கவேண்டும் என்பதற்காக பட்ஜெட் போட்டு பின்னாலும் ஒதுக்கவேண்டுமே, அப்படியிருக்கும்போது பற்றாக்குறை ஏற்படுவதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இவ்வாறு சில அலுவல்களிலிருந்து வேறு சில அலுவல்களுக்கு மாற்றுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கலாம். இதைப்பற்றி ஆய்வு முடிந்த பிறகுதான் சொல்லமுடியும்.

திரு. செ. மாதவன் : ஆசிரியர்களின் சம்பளத்திற்குச் சர்க்காரே கிராண்ட் கொடுக்கிறார்கள். அப்படியிருக்கும் போது தவறுகள் ஏற்படலாமா ? அதற்கான காரணம் என்ன ? ஏற்படாமல் இருக்க பாதுகாப்பு செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : பஞ்சாயத்து யூனியனிலே இது தான் முதலாவதாக நடந்திருக்கிறது என்று நினைக்கிறேன். இம்மாதிரி நடக்காமல் இருக்க முன் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று கலெக்டருக்கு உத்தரவு போடலாம் என்று கருதுகிறேன்.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : இப் பஞ்சாயத்து யூனியனிலே என்ன காரணத்தினால் அப்படி ஏற்பட்டது என்று பரிசீலிக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

11th March 1966]

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : முதலிலேயே பதில் அளித்தேன் கலெக்டருக்கு உத்திரவு போடுவது பற்றி கலெக்டர் அவர்கள் எக்ஸாமின் செய்து சர்க்காருக்கு ரிப்போர்ட் அனுப்புவார்.

திரு. இராம. அரங்கண்ணல் : தாமதத்திற்கான காரணங்களை அறிந்து சட்டசபை முடிவதற்குள் சபை முன்பு அறிக்கை வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : குறுகிய காலத்திற்குள் இயலாது என்று நம்புகிறேன்.

திரு. செ. மாதவன் : இந்தப் பஞ்சாயத்து யூனியனைப் பொறுத்த அளவில் சேர்மென் எப்படியோ ஜெயித்து வந்து விட்டார்கள். அவர்கள் நிர்வாகத்தை நடத்த முடியாத அளவிற்கு இருந்தால் அவர்களுக்கு வோட் போட்டவர்களே திரும்பிவிட்டதன் காரண மாகத்தான் தயக்கம் ஏற்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இம்மாதிரி அரசியல் காரணமாக இருக்கமுடியாது என்று நினைக்கிறேன். 1374 பசலியில் 50 காசி லிருந்து 70 காசு வரையிலும் ரெவின்யூ சர்சார்ஜை உயர்த்து வதாக தீர்மானம் செய்திருக்கிறார்கள். இதன் மூலம் சுமார் 38 ஆயிரம் வரும். ஆகவே, இது சம்பந்தமாக தெளிவாக அறிக்கை கலெக்டரிடமிருந்து வந்த பிறகுதான் பதில் சொல்லமுடியும்.

திரு. இராம. அரங்கண்ணல் : குறுகிய காலத்தில் அறிக்கை கிடைக்காது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படி யென்றால் எவ்வளவு காலம் ஆகும்? அறிக்கை கிடைத்தால் அதனு டைய நகல் ஒன்றை சபையில் வைப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : பஞ்சாயத்து யூனியன் சம்பந்தப் பட்டவரை எங்கு நிதி ஆதாரம் இருக்கிறது என்ற காரணத்தை எல்லாம் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். ஆகவேதான் குறு கிய காலத்தில் இயலாது என்று கூறினேன்.

திரு. எஸ். முருகையன் : பஞ்சாயத்து யூனியனில் ஒரு இனத்தி லிருந்து இன்னொரு இனத்திற்கு மாற்றி போடப்பட்டதனால் பற்றுக்குறை ஏற்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அபிப்பிராயத்தை வைத்துக் கொண்டு உண்மை என்று சொல்வது முறையல்ல.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Are they not to raise additional income by collecting local surcharge for maintaining elementary education? May I know whether the Government have not issued specific instructions to them to raise local surcharge for meeting the deficit and supplementing their income and also for meeting the additional expenditure in respect of maintenance of schools ?

THE HON. SRI S. M. A. MAJID : A separate question is needed, Sir.